**10.3.2026**
பெயர் - ராஜன், த/பெ. மூடலி கவுடர்
(துவங்கப்படும் நேரம் - 10.45 AM)
(முடிக்கப்பட்ட நேரம் - 11.05 AM)
**O.S. No.201/2017 (D.W - 3)**

**10** முதல் **16** வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

திம்மம்மாள் என்பவர் கர்நாடகாவை சேர்ந்தவர் என்றும் திருமணத்திற்கு பின்னர் உதகைக்கு வந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிசப்படவுன் ல் தான் அவர் இருந்தார். பிசப்படவுனில் எந்த இடத்தில் எங்கு குடியிருந்தார், அவரது பெற்றோர் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. அவர் பிசப்படவுனில் தான் வாழ்ந்து வந்தார் என்பதை காட்டுவதற்கு எந்த வித ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவரது தாய் மொழி கன்னடம் என்றும் அவருக்கு வேறு மொழிகள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு கன்னடமும், தமிழும் தெரியும். திம்மம்மாள் என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் குறிப்பிட்டுள்ள உயில் என்ன மொழியில் எழுதப்பட்டது என்றால் தமிழில் எழுதுப்பட்டுள்ளது. நான் அந்த உயிலை படித்து பார்த்துள்ளேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது என் வழக்கறிஞர் தமிழில் படித்து காண்பித்தார். அந்த உயில் எங்கு வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயிலில் எந்த சர்வே எண்ணில் யாருக்கு எவ்வளவு சொத்து எழுதப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதற்காக மற்ற வாரிசுகளுக்கு சொத்தை எழுதவில்லை என்பது பற்றிய விவரம் அந்த உயிலில்

குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதற்காக 2 வாரிசுகளுக்கு மட்டும் சொத்து எழுதப்பட்டுள்ளது என்ற காரணமும் அந்த உயிலில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையில் திம்மம்மாள் உயிலை எழுதவில்லை என்றும் அவருக்கு தமிழோ, கன்னடமோ எழுத படிக்க தெரியாது என்றும் அவ்வாறு அவர்உயிலை எழுதியிருந்தால் என்ன காரணத்திற்காக 2 வாரிசுகளுக்கு மட்டும் சொத்தினை கொடுத்துள்ளார் என்றும் மற்ற வாரிசுகளுக்கு சொத்தை கொடுக்கவில்லை என்ற காரணத்தையும் குறிப்பிட்டிருப்பார் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் உள்ள சொத்துக்களை என் தகப்பானாரின் பெயருக்கோ, எனது பெயருக்கோ நாளது தேதிவரை மாற்றம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். உண்மையில் உயில் எழுதியிருந்தால் திம்மம்மாள் எழுதியிருந்தால் உயிலில் என் தந்தைக்கும் என் தம்பிக்கும் ஒதுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட சொத்தினை அவர்களது பெயருக்கு மாற்றம் செய்திருப்போம் என்று சொன்னால் சரிதான். சிட்டாவில் என் தந்தை பெயரும் என் தம்பி பெயரும் வந்துள்ளது. என் தந்தையின் பெயரும், என் தம்பியின் பெயரும் சிட்டாவில் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு அந்த சிட்டாவினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி சங்கதியை பொய்யாக கூறுகிறேன் என்றும் மேற்படி சொத்து அனைத்து வாரிசுகளின் பெயரில் கூட்டாக தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு கூட்டு கிணறு மற்றும் பம்பு செட் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் இருந்து நீர் எடுத்து விவசாயம் செய்கிறோம் என்று சொன்னால் சரிதான். அந்த பம்பு செட்டின் மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்பதை காட்டுவதற்கு அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது என் தந்தை

பெயரில் உள்ளது. வாதி மற்றும் 5 முதல் 16 வரையிலனா பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றும் அந்த சொத்தில் அவர்களுக்கு பங்கு கொடுக்கக்கூடாது என்ற காரணத்திற்காக உயில் இருப்பதாக வும் அதன் அடிப்படையில் பாகப்பிரிவினை செய்து கொண்டதாகவும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.